# வருடாந்த அறிக்கை 2022

**தேசிய கல்வி ஆணைக்குழு**

**செலவினத் தலைப்பு 335**

## தவிசாளரின் செய்தி



2022 ஆம் ஆண்டில் அனைத்து இலங்கையர்களும் நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு முகம்கொடுக்க வேண்டிய பல்வேறு தடைகளுக்கு மத்தியில் தேசிய கல்வி ஆணைக்குழு குறிப்பிட்ட வருடத்தில் அடைந்து கொண்ட செயலாற்றுகை தொடர்பில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் என்ற வகையில், நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வித்துறையின் விரிவாக்கம் மற்றும் மாற்றங்களைச் செய்ய வேண்டியதன் அவசியத்திற்கு ஏற்ப, தேசியக் கல்வி ஆணைக்குழு மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைச் சீர்திருத்தங்கள் அடங்கிய தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பு (2020-2030) அறிக்கையைத் தயாரித்து கௌரவ கல்வி அமைச்சரிடமும் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்திற்கும் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு இயலுமாக இருந்தது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் மூலம் இலங்கைக் கல்வி முறைமையின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி நடத்தப்படுகின்ற ஆய்வுகளில் இருந்து பெறப்படும் அறிவை, கல்வித் துறையில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள ஏனைய தரப்பினர்களுடனும் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்களுடனும் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது தேசிய கல்வி ஆராய்ச்சி உச்சி மாநாடு, 2022 டிசம்பர் 16 இல் கல்வித்துறையில் உள்ள பல கல்வியாளர்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு இயலுமாக இருந்தது.

மேலும், க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர் ஒருவருவர் பல்கலைக்கழக நுழைவுக்கான காத்திருக்கின்ற காலத்தையும், பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்தி செய்வதற்கு பட்டதாரி மாணவர் ஒருவர் செலவிடுகின்ற காலத்தையும் குறைத்தல் தொடர்பிலும் மேற்கொள்ளக் கூடிய முற்போக்கான நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் நடத்தப்பட்ட இருதரப்பு ஆய்வின் அறிக்கையை கௌரவ கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நாட்டில் தற்போதுள்ள தொழிலாளர் வளங்களை தற்போதைய சந்தைத் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்து நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்தலை செயற்றிறனாக மாற்றுகின்ற நோக்கத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்களை இந்த ஆய்வு அடையாளம் கண்டுள்ளது.

இலங்கையின் கல்வித் துறையில் முன்னோடியாகத் திகழும் தேசியக் கல்வி ஆணைக்குழு எதிர்நோக்குகின்ற பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும்கூட, நாடு மற்றும் நாட்டு மக்களின் நலனுக்காக மேற்கொள்ள வேண்டிய தமது பங்களிப்பை தொடர்ந்தும் நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாக இருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.



பேராசிரியர் ஹரிஸ்சந்த்ர அபேகுணவர்தன
தவிசாளர்
தேசிய கல்வி ஆணைக்குழு

அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இல் 2.4.1 பந்திக்கமைய பாராளுமன்றத்தில் சமா்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டது

2023 ஆனி

# உள்ளடக்கங்கள்


| | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் | 01 | - நிறுவன பக்கப்பார்வை / செயல்படுத்தல் சுருக்கம் | 01-06 |
| அத்தியாயம் | 02 | - முன்னேற்றம் மற்றும் கண்ணோட்டம் | 07-16 |
| அத்தியாயம் | 03 | - ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றம் | 17-28 |
| அத்தியாயம் | 04 | - செயலாற்ற குறிகாட்டிகள் | 29-30 |
| அத்தியாயம் | 05 | - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயற்சாதனை | 31-32 |
| அத்தியாயம் | 06 | - மனித வள பக்கத்தோற்றம் | 33-34 |
| அத்தியாயம் | 07 | - இணக்க அறிக்கை | 35-39 |

# அத்தியாயம் 01 - நிறுவன பக்கத்தோற்றம்/ செயற்படுத்தல் சுருக்கம்

## 1.1 அறிமுகம்

1991 ஆம் ஆண்டு இலக்கம். 19 தாங்கிய தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் மூலம் தேசிய கல்வி ஆணைக்குழு தாபிக்கப்பட்டதானது, கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் பரந்த தேசிய கல்விக் கொள்கை தொடர்பாக ஜனாதிபதிக்கு பரிந்துரைகள் செய்தல் உள்ளிட்ட கல்விக் கொள்கையின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக மற்றும் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்றவாறு கல்வி முறைமையின் ஏற்புடைமை குறித்து கருத்தாடல் செய்யவும் சமூகத்தின், கல்விக் கொள்கையின் அனைத்து அம்சங்களிலும் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யும் அபிலாசையிலாகும்.

இளைஞர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கல்விக் கொள்கையில் ஒருமித்த கருத்தை எட்டுவதை நோக்கமாகக் கொண்ட "கல்விக் கொள்கைக்கான தேசியக் கொள்கை ஆணைக்குழு" ஒன்றை நிறுவுவதற்கான அவசரத் தேவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. "அத்தகைய ஆணைக்குழு உடனடியாக பத்தாண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதைத் தொடங்க வேண்டும் என்பதோடு 1991 ஆம் ஆண்டிலில் அந்தத் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்க வேண்டும்" என இளைஞர்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிட்ட மேற்படி விடயங்களை அடிப்படையாகக்கொண்டு காலத்துக்கு காலம் ஏற்படும் அரசியல் மாற்றங்களின் காரணமாக ஏற்படுத்தப்படும் செல்வாக்குகளிலிருந்து விடுபட்டதான கல்வி முறைமைக்காக ஒரு நிலையான மற்றும் உறுதியான கொள்கையை வகுப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்காக 1991 ஆம் ஆண்டின இலக்கம் 19 தாங்கிய தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் கீழ் தேசிய கல்வி ஆணைக்குழுதாபிக்கப்பட்டது. .

தேசியக் கலவி ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 2 (1) மற்றும்பிரிவு 2 (3) ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் ஜனாதிபதியிடம்சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையின் அடிப்படையில் கல்வியின்அனைத்து அம்சங்களுக்கும் பொறுப்பான அனைத்து அதிகாரங்களும் நிறுவனங்களும் இணங்க வேண்டிய தேசிய கல்விக் கொள்கை ஜனாதிபதியால் காலத்துக்கு காலம் அவ்வப்போது வெளியிடப்பட வேண்டும்.

ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரிவு 4 (1) இன்படி, ஆணைக்குழுவின் அமைப்பானது கல்வி, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் இயலுமை கொண்ட 10 பேர் மற்றும் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்படும் 05 உறுப்பினர்களையும் ஜனாதிபதி நியமிப்பதோடு சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படும் முழுநேர தலைவர் மற்றும் உப தலைவர் எனும் இருவரையும் ஆணைக்குழு கொண்டுள்ளது.

தற்போது செயற்பட்டு வருவது 8வது ஆணைக்குழுவாகும் (28.02.2020 தொடக்கம்)

## 1.2 நிறுவன இலக்குக்கூற்றுபணிக்கூற்று மற்றும்முக்கிய செயற்பாடுகள்

**நோக்கு**

உள்ளூர் மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அமைதியான, ஒன்றுபட்ட மற்றும் நேர்த்தியான சமுதாயத்தை உருவாக்க, வாழ்நாள் முழுவதும் முன்கூட்டியே கல்வி கற்ற ஒரு சமூகம்.

**பணி**

கல்வியின் தரம், பொருத்தம் மற்றும் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் கண்காணிப்பு மற்றும் சான்றிதழ் பாத்திரங்களுடன் தேசிய கல்விச் சான்றுகள், இலக்குகள், திறன் விவரங்கள் மற்றும் கல்வித் தகுதியின் தரங்களைத் தயாரிப்பதற்கான முன்னணி நிறுவனமாக அங்கீகாரம்.

## 1.3 முக்கிய செயற்பாடுகள்

(அ) கல்விக்கொள்கை மற்றும் திட்டமிடலை உடனுக்குடன் மறுபரிசீலனை செய்தல் மற்றும் பரந்த அளவில் தேசிய கல்விக் கொள்கை தொடர்பாக சனாதிபதிக்கு பரிந்துரை செய்தல் உள்ளிட, கல்வி கொள்கையின் தொடர்ச்சியான பேணலை உறுதிப்படுத்தல் மற்றும் சமூகத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்றவாறு கல்வி முறையை பொருத்தமாக்கிக் கொள்ள, கல்விக் கொள்கையின் அனைத்து அம்சங்கள் தொடர்பாக சனாதிபதிக்கு பரிந்துரைகள் முன்வைத்தல்.

(ஆ) நடைமுறைப்படுத்தப்படும் தேசியக் கல்விக் கொள்கை மற்றும் திட்டம் அல்லது திட்டங்களை அவ்வப்போது மதிப்பாய்வு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்து தேவைப்பட்டால் அந்தக் கொள்கை,திட்டம் அல்லது திட்டங்களில் ஏதேனும் செய்யவேண்டிய மாற்றங்களைச் சனாதிபதிக்கு பரிந்துரைத்தல்.

(இ) ஆணைக்குழுவின் ஆலோசனைக்காக ஜனாதிபதியால் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்படும் கல்வி தொடர்பான அனைத்துவிடயங்களிலும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குதல்.

## ஆணையத்தின் உறுப்பினர்கள்



**பேராசிரியர் எச். அபேகுணவர்தன** (தலைவர்)



**திருமதி பத்மினி ரணவீர**
துணைத் தலைவர்(கொள்கை)



**திரு கிங்ஸ்லி பிரநந்து**
துணைத் தலைவர்(திட்டமிடல்)

## அதிகாரப்பூர்வ உறுப்பினர்கள்



**பேராசிரியர் சம்பத் அமரதுங்க**
சபாபதி,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு



**திரு. பி. கே. யு. ஏ. விக்கிரமசிங்க**
தலைவர்இ மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விஆணையம்



**திரு. ஏம்.என் ரணசிங்க**
செயலாளர்,கல்விஅமைச்சு



**திரு. ரீ. ஏம். ஜே. பண்டார**
இயக்குனர் தேசிய திட்டமிடல் துறை நிதி அமைச்சு



**திரு. எம். ஏம். நயிமுயின்**
பொது நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர்

## மேலதிக உறுப்பினர்கள்



**டாக்டர். ரீ. ஏ. பியசிறி**
முன்னாள் துணைவேந்தர்
தொழிற்கல்வி தொழில்நுட்ப
பல்கலைக்கழகம்



**டாக்டர் கபில பண்டார**
பீடாதிபதி கல்வி பீடம் கொழும்பு
பல்கலைக்கழகம்



**கலாநிதி அனுருத்த பதெனிய**
குழந்தை நரம்பியல் நிபுணர்
எங்கள் லேடி ஆஃப் ரிட்ஜ்வே குழந்தைகள்
மருத்துவமனை



**திருமதி டாக்டர் இந்திராநி தலகல**
முன்னாள் துறைத் தலைவர்
ஆரம்ப மற்றும் ஆரம்பக் கல்விப் பள்ளி
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



**திரு டீ. எம். ஏ. ஆர் பி. திசாணாயக்க**
பிரதமரின் செயலாளர்,
பிரதமர் செயலகம்



**டாக்டர் ஹர்ஷா அலாஸ்**
தலைவர் கேட்வே சர்வதேச பள்ளி



**திரு. சுவாமிநாதன் விமல்**
மூத்த விரிவுரையாளர்
மொழியியல் மற்றும் ஆங்கிலம் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் கண்ணோட்டம்

## 2.1 சிறப்பு சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

**அறிமுகம்**

தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட முக்கிய பணிகள் பின்வருமாறு.

1. தற்போதுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு செய்வதன் மூலம் நாட்டின் கல்விக் கொள்கைகளை மதிப்பீடு செய்தல்.
2. தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப கல்விக் கொள்கை முன்மொழிவுகளை இற்றைப்படுத்தல்
3. மதிப்பாய்வுகள், பகுப்பாய்வுகள், மதிப்பீடுகள் மற்றும் தற்போதைய கொள்கைகள், திட்டங்கள் மற்றும் திட்டங்களின் நவீனமயமாக்கல் ஆகியவற்றின் அடிப்படையில் கல்விக் கொள்கைகள் குறித்த பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு வழங்குதல்.

மேற்கூறிய பணிகளை மேற்கொள்வதற்காக, தேசிய கல்வி ஆணைக்குழு, கீழே குறிப்பிட்டுள்ளபடி நான்கு பகுதிகளின் கீழ் நான்கு நிலையியற் குழுக்களை அமைத்துள்ளது.

1. பொதுக் கல்விக்கான நிலையியற் குழு.
2. முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தக்கான நிலையியற் குழு.
3. உயர்கல்விக்கான நிலையியற் குழு
4. தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்விக்கான நிலையியற் குழு.




ஒவ்வொரு நிலையியற் குழுவிலும் 15 முதல் 20 வரையிலான கல்வியாளர்கள் அரச மற்றும் தனியார் துறைகளில் தொடர்புடைய புலங்களை பிரதிநிதித்துவப்படுத்துவர் அடங்குவர்.

2021 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் செயலாற்றுகையை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

### 2.1.1 தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பை (2020-2030) மீளாய்வு செய்தல் மற்றும் பிரதிகளை அச்சிடுதல்



தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்திற்கு ஏற்ப, கல்வித்துறையின் சகல பிரிவுகள் தொடர்பிலும் பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களால் இணக்கப்பாட்டை காண்பிக்க வேண்டிய தேசியக் கல்விக் கொள்கையை, ஜனாதிபதி அவர்களால் அவ்வப்போது அறிவிக்க வேண்டும், தேசிய கல்வி ஆணைக்குழுவினால் நிறைவேற்ற வேண்டிய முன்னுரிமைப் பணிகளை பூர்த்தி செய்து இலங்கைக் கல்வித்துறையில் பிரதான 08 துறைகள் உட்படுகின்ற வகையில் 15 உறுப்பினர்களைக் கொண்ட வழிநடத்தல் குழு மற்றும் விசேட நிபுணர் குழுக்களால் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற 4 பிரிவுகளை உள்ளடக்கி தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பு (2020-2030) அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் உள்ளடக்கங்கள் பின்வருமாறு.

பிரிவு 1 - இலங்கைப் பொருளாதாரம் மற்றும் தேசிய கல்வி முறை, அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் ஒட்டுமொத்த பகுப்பாய்வு,
பிரிவு 2 - கல்வியின் தொலைநோக்கு, தேசிய கல்விக் குறிக்கோள்கள் மற்றும் தேசிய கற்றல் திறன் கட்டமைப்பு
பிரிவு 3 - தேசிய கொள்கை கட்டமைப்பின் நோக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல் கோட்பாடுகள்
பிரிவு 4 - துணைப் பிரிவுகள் - குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் மூலோபாய நடவடிக்கைகள்

- தொகுதி 1 பூவர் குழந்தை பருவ கல்வி மற்றும் அது தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள்
- தொகுதி 2 பொதுக் கல்வி மற்றும் அது தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள்
- தொகுதி 3 உயர் கல்வி மற்றும் அது தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள்
- தொகுதி 4 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள்
- தொகுதி 5 பிரிவெனா கல்வி தொடர்பான கொள்கை கட்டமைப்பு
- தொகுதி 6 விசேட கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள்
- தொகுதி 7 முறைசாரா கல்வி மற்றும் அது தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள்
- தொகுதி 8 சர்வதேச பாடசாலைக் கல்வி மற்றும் அது தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள்

இந்த அறிக்கை 2022ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் முடிக்கப்பட்டு கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவிடம் கையளிக்கப்பட்டது. இந்த அறிக்கை 2023 முதல்

#### அ) சர்வதேச பாடசாலைக் கல்வி குறித்த தேசிய கொள்கை முன்மொழிவு வரைதல் மற்றும் வழங்கல்

தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பின் (2020-2030) கீழ், 2021 ஆம் ஆண்டில் சர்வதேச பாடசாலை கல்விக்கான கொள்கைகளை உருவாக்குவது தொடர்பான பெரும்பாலான பணிகளை பூர்த்தி செய்வதற்கு இயலுமாக இருந்தது என்பதோடு 2022 ஆம் ஆண்டில், இது சரியான வடிவத்திற்கு உட்படுத்தி மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்தல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டது.

**ஆ) உயர்கல்விக்கான தேசிய கொள்கை முன்மொழிவை உருவாக்குதல்**

உயர்கல்வி தொடர்பான தேசிய கொள்கை முன்மொழிவை தயாரிப்பதற்காக, இத்துறையில் உள்ள ஒரு நிபுணர் குழுவுடன் தொடர்பை ஏற்படுத்தி விசேட நிபுணர் குழு கூட்டங்கள் பலவற்றை பௌதீக ரீதியாகவும் மற்றும் இயங்கலை மூலமும் நடாத்தி, அந்த நிபுணத்துவ குழுவின் அறிவைப் பெறுவதன் மூலம் கொள்கை உருவாக்கம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

உயர்கல்வித் துறையின் விரிவான நிலை மதிப்பாய்வுக்குப் பின்னர், கொள்கை முன்மொழிவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள், உயர்கல்வித் துறைக்கு 11 முக்கிய பகுதிகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளன. இந்த 11 முக்கிய பகுதிகள்: i) அணுகல், சமவாய்ப்பு மற்றும் சேர்த்துக் கொள்தல் ii) கல்வி தொடர்பான பஞ்சாங்கம், பாடத்திட்ட வடிவமைப்பு, உள்ளடக்கம் மற்றும் கற்றல் பெறுபேறுகள், iii) கற்பித்தல்-கற்றல் செயல்முறை மற்றும் மதிப்பீடுகள் iv) கற்பவர்கள், கற்றல் சூழல் மற்றும் கற்பவர் நலன் v) அளவீடுகளை அடையாளப்படுத்துதல் மற்றும் தர உத்தரவாதப்படுத்தல் vi) ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம், தொழில்நுட்ப பரிமாற்றம், கலை மற்றும் கலாச்சாரத்தை வளர்த்தல் vii) ஆளுமை விருத்தி, குடியியல் உணர்வு, நாட்டுப்பற்று, வேலை வாய்ப்பு மற்றும் தொழில்முனைவு திறன் viii) உயர் கல்விக்கு நிதியளித்தல் ix) மனித வளங்களின் தரம் x) பௌதீக வளங்களின் தரம், மற்றும் xi) ஒழுங்குவிதிகள் மற்றும் நிர்வாகம் மற்றும் முகாமை அம்சங்கள் என்பனவாகும்.

இந்த கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள், கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, அரச பல்கலைக்கழகங்கள், அரச மற்றும் அரசு அல்லாத பல்கலைக்கழக பட்டங்களை வழங்குகின்ற உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, உயர் கல்வியின் தகைமை மற்றும் தரத்தை மேம்படுத்த முக்கியமான மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டங்களை விருத்தி செய்வதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்படும்.

2022ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில், முழு முன்மொழிவும் தயாரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டு தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பு (2020-2030) அச்சிடப்பட்டது.

**இ) ஆரம்ப குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி தொடர்பான தேசிய கொள்கை முன்மொழிவு உருவாக்கம்**

ஆரம்பக் குழந்தைப்பருவ பராமரிப்பு மற்றும் கல்வி உள்ளிட்ட தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பு (2020-2030) தேசியக் கல்வி ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டு ஒட்டுமொத்த முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2022ஆம் ஆண்டு ஜுன் மாதமளவில் அச்சிடுதல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டது

**ஈ) தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய கொள்கை முன்மொழிவுகளை உருவாக்குதல் (2020-2030).**



தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பிலான தேசிய கொள்கை முன்மொழிவுகள் அத்துறையில் உள்ள பல அறிஞர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டு முழு முன்மொழிவும் தொகுக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்குள் அச்சிடப்பட்டது.

### 2.1.2 தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை கல்வி குறித்த தேசிய மாநாட்டை நடத்துதல்



தேசிய கல்வி ஆணைக்குழுவால் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட கல்விக்கான தேசிய ஆராய்ச்சி மாநாடு 2022 ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்றது. கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ கலாநிதி சுரேன் ராகவன், கல்வி அமைச்சின் செயலாளர், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் பிராந்தியக் கல்வித் தலைவர் ஆகியோர் ஏனைய விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டனர். பல்கலைக்கழக உபவேந்தர்கள், பீடாதிபதிகள் மற்றும் மாகாணக் கல்வி அலுவலகங்களின் தலைவர்கள் உட்பட இலங்கையின் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள 150க்கும் மேற்பட்ட அறிஞர்களின் பங்குபற்றுதலுடன் முதலாவது ஆய்வு மாநாடு பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.

அங்கு கல்வியின் 4 முக்கிய பகுதிகளை உள்ளடக்கிய அதாவது (i) குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்வி (ii) பொதுக் கல்வி (iii) உயர்கல்வி (iv) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளை உள்ளடக்கி பூர்த்தி செய்யப்பட்ட 27ஆய்வு அறிக்கைகள் இந்த ஆராய்ச்சி (இரண்டு ஒரே நேரத்தில் அமர்வுகளின்படி) மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன என்பதோடு அந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் பற்றிய அறிவு பகிர்ந்து கொள்ளப்பட்டது. இந்த அமர்வில் சிறந்த கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆற்றிய 8 முக்கிய சொற்பொழிவுகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 27 ஆய்வு வெளியீடுகள் இந்த அமர்வுகளின் போது வெளியிடப்பட்டன.

கல்வி தொடர்பாக அறிஞர்கள் நடத்தும் ஆய்வுகளின் அறிவைப் பகிர்ந்து கொள்ள பொருத்தமான தளத்தை உருவாக்கும் கட்டமைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டிற்கு கல்வியாளர்களின் பாராட்டை தேசிய கல்வி ஆணைக்குழு பெற்றது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் முதலாவது தேசிய கல்வி மாநாடு தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை மீளாய்வு செய்தல் மற்றும் அச்சிடுதல் ஆகியவை நடைபெற்றன.

### அ) ஆரம்ப குழந்தை பருவ மேம்பாட்டு மையங்களின் கணக்கெடுப்பு

அரம்ப குழந்தைப் பருவப் பராமரிப்பு மற்றும் கல்வி தொடர்பான கொள்கை முன்மொழிவின் பரிந்துரைகளில் ஒன்று, ஆரம்ப குழந்தைப் பருவ வளர்ச்சி மையங்கள், அவற்றின் ஆரம்பக் குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வித் திட்டங்களை மதிப்பாய்வு செய்து சான்றளிக்க ஒரு தர உத்தரவாதக் கட்டமைப்பையும் நிறுவன ரீதியான பொறிமுறையையும் நிறுவுவதாகும். இந்த கணக்கெடுப்பு தொடர்பாக, 2022 ஆம் ஆண்டில், குழந்தை பருவ மேம்பாட்டு அதிகாரிகளுக்கு, கணக்கெடுப்பு வினாக்கொத்து குறித்து பல சுற்று விவாதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டு, தரவுகளை சேகரித்த பின்னர், அட்டவணைப்படி வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு, கணக்கெடுப்பு பணி 2022ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதிக்குள் நிறைவு செய்யப்பட்டது. அதன் பின்னர், அத்தகைய ஆய்வின் சுருக்கமான அறிக்கை தேசிய கல்வி ஆணையத்தின் முதலாவது ஈராண்டு கல்வி ஆராய்ச்சி மாநாட்டில் ஆய்வறிக்கையாக வழங்கப்பட்டது. இது 2022 டிசம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற அமர்வின் போது அச்சுப் பிரதியாக வெளியிடப்பட்டது.

**ஆ) இலங்கையில் பாடசாலைக் கல்வியில் STEM/STEAM நடைமுறைகளின் தற்போதைய நிலை மற்றும் செயல்படுத்தப்படுகின்ற முறை**



உலகெங்கிலும் உள்ள அநேகமான நாடுகள் 21 ஆம் நூற்றாண்டின் தொழில் சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய திறன்களைக் கொண்ட மாணவர்களைத் தயாரிப்பதில் STEM/STEAM கல்வி அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றன. இலங்கையில் இக்கல்வி அணுகுமுறை தொடர்பில் சில ஆரம்பங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் பாடசாலை அமைப்பில் இது இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, இந்த ஆய்வின் முதன்மை நோக்கம் STEM/ STEAM முக்கிய அக்கறைதாரர்களின் விழிப்புணர்வு மற்றும் செயல்படுத்துகின்ற முறையை கண்டறிவதாகும்.

இதன்படி, 2022ஆம் ஆண்டு மேற்படி, இந்த ஆய்விற்காக ஈடுபடுத்தப்பட்ட மேல், மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியதாக தெரிவுசெய்யப்பட்ட 1051 பாடசாலைகளுக்கு வினாக் கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. மேலும், அந்தத் தரவுகளின் அடிப்படையில், தேசியக் கல்வி ஆணைக்குழு நடத்தும் முதலாவது, ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் கல்விக்கான தேசிய ஆராய்ச்சி மாநாட்டிற்கு ஒரு ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் இந்த ஆராய்ச்சிக்காக, மேல், மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மூன்று குழு நேர்காணல்கள் அந்த மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாடத்திற்குரிய பணிப்பாளர்களுடன் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வினாக்கொத்துக்கள் மற்றும் குழு நேர்காணல்கள் மூலம் பெறப்பட்ட முதன்மை தரவு மற்றும் இரண்டாம் நிலை தரவுகளின் அடிப்படையில் 2023 ஆண்டுக்குள் ஆய்வு அறிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**இ) இலங்கையில் ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தியின் தற்போதைய நிலை: ஆசிரியர் நிபுணத்துவத்திற்கான கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் நடைமுறைகள்**



தீவு முழுவதும் 1AB, 1C, 2வது வகை, 3வது வகை என அனைத்து வகையான பாடசாலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 2,000 ஆசிரியர்களின் மாதிரிக்கு அஞ்சல் வினாக்கொத்தொன்றை அனுப்புவதன் மூலம் தரவு சேகரிக்கப்பட்டது. இந்தக் வினாக்கொத்தானது ஆசிரியர்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள், ஆசிரியர் மேம்பாடு, அவர்களின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் பற்றி வினவப்பட்டது. கல்வி தொடர்பான பல்வேறு தரப்பினருடன் ஒருமுகப்படுத்தப்பட்ட நேர்காணல்களை நடத்தி இறுதி அறிக்கையை 2023 முதல் காலாண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### ஈ) இலங்கையில் உள்ள சர்வதேச பாடசாலைகளின் ஆய்வு மற்றும் கற்கை

சர்வதேச பாடசாலைக் கல்வி தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகளின் பரிந்துரைகளில் ஒன்று, இலங்கையில் உள்ள சர்வதேச பாடசாலை கல்விக்கான தர உறுதிப் பொறிமுறையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதாகும், அதில் தரநிலைகள் மற்றும் கண்காணிப்பு முறைமை ஆகியவை அடங்கும். அதன்படி, இந்தத் தர உறுதிப் பொறிமுறையைத் தயாரிப்பதற்கு முன்னோடியாக சர்வதேசப் பாடசாலைகளின் தற்போதைய நிலையை மதிப்பிடும் நோக்கில் சர்வதேசப் பாடசாலைகளின் விரைவான மதிப்பீட்டை நடத்த தேசிய கல்வி ஆணைக்குழு முடிவு செய்தது. அதை நிறைவேற்றும் நோக்கில் "இலங்கையில் உள்ள சர்வதேச பாடசாலைகளின் கணக்கெடுப்பு" என்ற பெயரில் ஆய்வு ஒன்று தொடங்கப்பட்டது. இந்த ஆய்வின் கீழ், 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், கணக்கெடுப்பு வினாக்கொனத்து இறுதி வரைவு திருத்தப்பட்டு அதன் அறிவியல் ரீதியான செல்லுபடியை சரிபார்ப்பதற்காக களத்திற்கு சென்று நடைமுறை ஆய்வை மேற்கொண்டு, அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகளுக்கு ஏற்ப, மீண்டும் வினாக்கொத்தை திருத்தம் செய்து, ஆய்வுக்காக இறுதி வினாக்கொத்தை தயாரித்துக் கொள்வதற்கு இயலுமாக இருந்தது. இந்த வினாக்கொத்துடன் தரவு சேகரிப்பை ஆரம்பித்து மாதிரியில் உள்ள பாடசாலைகளுக்கு களப் பயணங்கள் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்பில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளுக்குச் சென்று தரவுகளை சேகரிக்க முடிந்தது. ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக. மாதிரியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் களப் பயணம் மேற்கொண்டு தரவுகளை சேகரிக்க முடியவில்லை. ஆயினும் இந்த கணக்கெடுப்பு தொடர்பாக, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தரவுகள் பெறப்பட வேண்டும் என்பதால், தபால் மூலம் கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது.

பின்னர், பாடசாலைகளுக்கு தபால் மூலம் வினாக்கொத்துக்களை அனுப்ப ஆரம்பித்து, தபால் மூலம் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இச் செயற்பாட்டை மேற்கொள்கின்ற போது, அநேகமான பாடசாலைகளிலிருந்து தரவுகள் கிடைக்கப் பெற்றன ஆயினும் அவ்வாறு தரவுகளை வழங்காத பாடசாலைகளுக்கு தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டு தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்குப் பின்னர், தரவை கோவைப்படுத்துவதன் மூலம் தரவு பகுப்பாய்வை எளிதாக்கும் முறையில் தரவு உள்ளிடப்பட்டது. இவ் வழியில் சேகரிக்கப்பட்ட தரவுகள் சமூகவியல் விஞ்ஞானத்திற்கான புள்ளியியல் பொதி (SPSS) மற்றும் அடிப்படை பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு, இந்த சர்வதேச பாடசாலைகளின் தற்போதைய நிலைமை குறித்து ஒரு ஆரம்ப ஆய்வு நடத்தப்பட்டது என்பதோடு முடிவுகளின் அடிப்படையில் ஒரு ஆய்வுக் கட்டுரை தயாரிக்கப்பட்டு 2022 டிசம்பர் 16ஆம் திகதி தேசிய கல்வி ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட முதலாவது ஈராண்டு கல்விக்கான தேசிய ஆராய்ச்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. இந்தத் தகவல் ஒரு தேர்வுத் தாளாக தயாரிக்கப்பட்டு 2023 இல் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆய்வின் விரிவாக, 2023 இல் பல களப் பயணங்கள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

### உ) நிலைபேறான உயர் கல்விக்காக இலங்கையில் பல்கலைக்கழக டிஜிட்டல் மயமாக்கல் பற்றிய ஆய்வு

நிலைபேறான உயர்கல்விக்காக இலங்கைப் பல்கலைக்கழகங்கள் எந்த அளவிற்கு டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதற்காக 6 வினாக்கொத்துக்கள் மூலம் தரவு சேகரித்தல். அத்தகைய 6 வினாக்கொத்துக்களுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள், முதுநிலை முகாமையாளர்கள், நிர்வாக அலுவலர்கள், நூலக அலுவலர்கள், தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் பங்கு பற்றினர் என்பதோடு 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் கணக்கெடுப்புப் பணிகள் நிறைவடைந்தன. அதன் பின்னர், ஆய்வின் சுருக்கமான அறிக்கை தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது, ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் தேசிய ஆராய்ச்சி மாநாட்டிற்கு ஆய்வறிக்கையாக வழங்கப்பட்டது. இது 2022 டிசம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற அமர்வின் போது அச்சுப்பிரதி வடிவில் வெளியிடப்பட்டது.

**ஊ) இலங்கை தொழில் சந்தையுடன் பல்கலைக்கழகங்களால் உற்பத்தி செய்யப்படும் மனித வளங்களின் இணக்கத்தன்மையை ஆராய்தல்:**
இந்த ஆய்வின் நோக்கங்கள், பல்கலைக்கழக மாணவர் ஆட்சேர்ப்பு மற்றும் பட்டதாரி வெளியீட்டுத் தரவை பகுப்பாய்வு செய்தல், பட்டதாரி வேலைவாய்ப்பு போக்குகள், பட்டதாரி வேலைவாய்ப்பு விகிதங்கள் மற்றும் தர உத்தரவாத மதிப்பாய்வு பெபேறுகள் மற்றும் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான தொழில்தருநர்களின் அணுகுமுறை ஆகியவற்றுக்கு இடையேயான உறவை ஆய்வு செய்வதாகும்.

இந்த ஆய்வு மூன்று கட்டங்களில் செயல்படுத்தப்பட்டது: கட்டம் I: இரண்டாம் நிலை தரவு பகுப்பாய்வு: கட்டம் II: தர உத்தரவாதம் (QA) மதிப்பாய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்தல் மற்றும் கட்டம் III: பட்டதாரிகள் தொடர்பில் தொழில்தருனர்களின் அணுகுமுறை பற்றிய ஆய்வு.

கட்டம் I உடன் தொடர்பில் இரண்டாம் நிலைத் தரவுகள் குடித்தொகை மற்றும் புள்ளியியல் திணைக்களம், கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரச பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிலிருந்தும் மற்றும் II ஆம் கட்ட தரவுகள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தரநிலை உறுதிப்படுத்தல் சபையிலிருந்தும் (QAC/UGC) 2022ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டன. III கட்டத்திற்கான தரவு சேகரிப்புக்காக ஒரு வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது. இந்த வினாக்கொத்து இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பதிவு செய்யப்பட்ட 561 தொழில்தரனர்களுக்கு விநியோகிக்கப்பட்டு மற்றும் தரவு சேகரிப்பு நடைபெற்று வருகிறது.

I மற்றும் II ஆம் கட்டங்களில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், ஒரு சுருக்கமான அறிக்கை தயாரிக்கப்பட்டு, தேசிய கல்வி ஆணைக்குழுவின் கல்வி குறித்த முதலாவது ஈராண்டு ஆராய்ச்சி மாநாட்டிற்கு ஆய்வறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது. இது 2022 டிசம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற தொடர்புடைய அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டு அன்றைய தினம் அச்சிடப்பட்டது.

**எ) இலங்கையில் உள்ள தொழிற்கல்வி தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களில் NVQ 5, 6 டிப்ளோமா கற்கைநெறிகளின் செயல்திறனை அளவிடுவதற்கான ஆய்வுக் கற்கை.**
இலங்கையில் NVQ 5, 6 டிப்ளோமா சான்றிதழ்களை வழங்குகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட காலகட்டத்தில் அரச கல்வி நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தரவு சேகரித்து இந்த ஆய்வு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் இந்த ஆய்வின் சுருக்கமான அறிக்கை தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஈராண்டு கல்விக் குழுவிற்கு ஆய்வுக்கட்டுரையாக அளிக்கப்பட்டது. இது 2022ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற முதலாம் இராண்டு கல்வி ஆராய்ச்சி மாநாட்டின் தொடர்புடைய அமர்வில் அச்சுப் பிரதியாக வெளியிடப்பட்டது.

### 2.1.3 கல்வி பற்றிய தரவுகளைக் கொண்ட அறிக்கையைத் தயாரித்தல்
இலங்கையில் கல்வி தொடர்பான புள்ளிவிபரத் தரவு சேகரிப்பை வெளியிடுவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழு 2021 இல் ஆரம்பித்து வைத்தது. இரண்டு பகுதிகளைக் கொண்ட கல்வி தரவு சேகரிப்பானது பல்வேறு மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள், அட்டவணைகள், வரைபடங்கள் போன்றவற்றின் மூலம் இந்த புள்ளியியல் தரவு சேகரிப்பின் முதல் பகுதி கொண்டுள்ளது.
இலங்கையின் கல்வி தொடர்பான தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருளின் படி மேற்கொள்ளப்படுகின்ற பகுப்பாய்வு புள்ளிவிபரத் தரவு சேகரிப்பு இரண்டாம் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கல்வி முறை, ஆசிரியர் ஆட்சேர்ப்பு, வேலை வாய்ப்பு மற்றும் மேம்பாடு பற்றிய பகுப்பாய்வை உள்ளடக்கியது. இங்கு விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது குறித்து விசேட பகுப்பாய்வு நடத்தப்படும்.

தற்போது, அறிக்கை தொகுக்கும் பணி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

## 2.1.4 ஏனைய நடவடிக்கைகள்

### அ) பல்கலைக்கழக சேர்க்கை கொள்கை ஆய்வு



பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்கின் கொள்கை தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும் இணைந்து நடத்திய ஆய்வு.

ஒவ்வொரு பாடத்திலும் உள்ள சிரம நிலையிலிருந்து எழும் முரண்பாடுகளை நீக்குவதற்கு "Z-புள்ளி" முறையானது வெவ்வேறு பாடங்களுக்கான மதிப்பெண்ணில் ஒரு சிறந்த வழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களின் "Z புள்ளி" தர நிர்ணயம் பலமுறை நீதிமன்றங்களில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டதுடன், இதனால் பல்கலைக்கழக அனுமதியில் தேவையற்ற காலதாமதங்களும் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. மேலும், இது தொடர்பாக அதிருப்தியில் உள்ள மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் தரப்பில் இருந்து பல முறைப்பாடுகள் வந்துள்ளதால், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்குவதில் தேர்வு முறை குறித்து பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல், க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கும் பல்கலைக்கழக நுழைவுக்கும் இடையிலான நீண்ட இடைவெளி காரணமாக பல்கலைக்கழக நுழைவுத் தாமதம் தொடர்பிலும் பல தரப்பினர் கவனம் செலுத்தியுள்ளனர். விடைத்தாள்கள் திருத்துவதற்கு நீண்ட காலம் எடுப்பதும், மறுபரிசீலனைக்கு ஏறத்தாழ 08 மாதங்கள் எடுப்பதும் இந்த தாமதத்திற்குக் காரணம் எனத் தெரிகிறது.

இது தவிர, முதன்மையாக, மாணவர்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, பதிவு செய்யாத கற்கைநெறிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புகின்ற போது பல தவணைகளின் தேவைப்பாட்டுப் பிரச்சினை எழுகின்ற காரணத்தினனால் கல்விசார் பாடநெறிக் கற்கைகளின் பதிவு செய்தல் மற்றும் அவற்றை தொடங்குதல் தொடர்பில் பல்கலைக்கழகத்திற்கு உள்ளே நீண்டகால தாமதம் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

எனவே, தேசியக் கல்வி ஆணைக்குழுவும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கு குழுவும், பரஸ்பர உடன்படிக்கையின் அடிப்படையில், பின்வரும் விடயங்களைப் பரிசீலனை செய்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு 2021-ல் தொடங்கப்பட்ட செயல்முறையை 2022-ல் வெற்றிகரமாக முடிப்பதற்கான இயலுமாக இருந்துள்ளது. மேற்படி அறிக்கை 2022 இல் கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பரிந்துரைகளுக்கு அமைச்சர்கள் குழுவின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### ஆ) பொதுக் கல்வி தொடர்பான பாடத்திட்டக் கட்டமைப்பு

கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தால் தொகுக்கப்பட்ட தேசிய பாடத்திட்ட கட்டமைப்பை அவதானிப்பதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது, மேலும் தேசிய கல்வி ஆணைக்குழு தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பின் (2020-2030) படி அறிக்கையை மதிப்பாய்வு செய்ய ஒரு நிபுணர் குழுவை நியமித்தது.

அதன்படி, தேசிய பாடத்திட்ட கட்டமைப்புக்குள் கல்வியின் தொலைநோக்கு, தேசிய கல்வி நோக்கங்கள் மற்றும் தேசிய கல்வித் திறன் கட்டமைப்பு என்பவற்றுடன் இணங்கி பொதுக் கல்வியின் தேசிய பாடத்திட்ட கட்டமைப்பை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டும் என்பது குறித்த அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய விரிவான அறிக்கையை தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு தொகுக்க முடிந்தது. இந்த அறிக்கை மாண்புமிகு கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.2 தற்போதுள்ள சவால்கள்

தேசிய கல்வி ஆணைக்குழுவின் நடுத்தர கால செயலாற்றுகை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப, பொதுக் கல்வி, உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் அந்த கற்கைகளுக்கான வசதிகள் வழங்குகின்ற நிறுவன மற்றும் நிர்வாக சவால்கள் பின்வருமாறு.

- முறையான வசதிகளுடன் கூடிய நிரந்தர அலுவலகம் ஒன்றைப் பெற்றுக் கொள்தல்.
- அத்தியாவசிய ஆட்சேர்ப்புகளைச் செய்தல்.
- ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட உயர்தர கொள்கைகள் மற்றும் அறிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள்/நிறுவனங்கள் மூலம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமை.

## 2.3 எதிர்கால இலக்குகள்

தேசிய கல்வி ஆணைக்குழுவின் நடுத்தர கால செயல்திறன் மேம்பாட்டுத் திட்டத்திறகு ஏற்ப, பொதுக் கல்வி, உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் அத்தகைய கற்கைநெறிகளுக்கான வசதிகள் வழங்குகின்ற நிறுவன மற்றும் நிர்வாக ரீதியான எதிர்கால இலக்குகள் பின்வருமாறு.

- தேசிய கல்வி ஆணைக் குழுவை வசதிகளுடன் கூடிய புதிய ஒரு இடத்தில் நிறுவுதல்.
- நிறுவனத்தின் புதிய திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு இயலுமான கல்விசார் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு இயலுமான முறையில்மற்றும் ஆர்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய அலுவலர்களை தொடர்ந்தும் நீண்ட காலத்திற்கு தக்கவைத்துக் கொள்வதற்கு இயலுமான முறையில் ஆட்சேர்ப்பு படிமுறையைத் திருத்துதல் மற்றும் உரிய வேதனங்களை வழங்குவது தொடர்பான அனுமதிகளைப் பெறுதல்,
- பத்து வருட தேசிய கல்விக் கொள்கைக்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்தல்.
- தேசிய கல்வி ஆணைக்குழுவை மேலும் மேம்படுத்துகின்ற நோக்கத்தில் தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்தல். இதன்மூலம், தற்போது எவ்வித தரச்சான்றிதழ் உறுதிப்படுத்தல் மற்றும் செல்லுபடியாக்குகின்ற நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்படாத: ஆரம்ப குழந்தைப் பருவக் கல்வி, சர்வதேச பாடசாலைக கல்வி மற்றும் அரசு சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரநிலைகளை அமைக்கவும், அத்தகைய தரநியமங்களுக்கு இணங்குவதைக் கண்காணிப்பதற்கு இயலுமான முறையில் தேசியக் கல்வி ஆணைக் குழுவை விருத்தி செய்வதன் மூலம் தேசியக் கல்வி ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துதல்.

## அத்தியாயம் 03 – ஆண்டின் ஒட்டுமொத்த நிதி செயல்திறன்

### 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| பாதீட்டு 2022 | | குறிப்பு | உண்மை நிலை 2022 | உண்மை நிலை 2021 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 60,660,000 | 51,488,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 31,150 | 13,462 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 734,606 | 719,843 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **61,425,756** | **52,221,305** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **61,425,756** | **52,221,305** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **824** | 21,843 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **61,424,932** | **52,199,462** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 33,200,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 30,408,859 | 25,392,352 | |
| 27,000,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 26,037,934 | 22,207,005 | ஏசீஏ-2(ii) |
| 800,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 797,888 | 641,060 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| 61,000,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **57,244,681** | **48,240,417** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| - | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | - | - | |
| 2,500,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 359,180 | 1,242,517 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 200,000 | திறன் விருத்தி | 14 | - | 160,250 | |
| 8,300,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 4,026,526 | 2,308,137 | |
| 11,000,000 | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **4,385,706** | **3,710,904** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | **14,350** | 12,662 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | **1,496,000** | 588,529 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **1,510,350** | **601,191** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 63,140,737 | 52,552,512 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | (1,715,805) | (353,050) | |
| | **பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | | (1,715,805) | (353,050) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | (1,715,805) | (353,050) | ஏசீஏ-3 |

1

**3.2 –**

## 3.3 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2022 ரூபா | 2021 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 44,193,169.29 | 46,262,830 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 1,992,928.70 | 1,231,270 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **46,186,097.99** | **47,494,100** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 1,942,878.70 | 1,198,020.00 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 44,193,169.29 | 46,262,830.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 50,050.00 | 33,250.00 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **46,186,097.99** | **47,494,100** |

பக்க இலக்கம் 8... முதல் 32 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 33.. முதல் 38 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2023/2/24

M.N. Ranasinghe
Secretary
Ministry of Education
"Isurupaya"
Pelawatta, Battaramulla

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி :

Prof. Harischandra Abeygunawardena
Chairman
National Education Commission
1st Floor, Block 05, BMICH,
Colombo 07.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி :

M.W. Gayani Chamalika
Accountant
National Education Commission
1st Floor, Block 05, BMICH,
Colombo 07.

2

## 3.4 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஎ- சீ

### 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | **2022** ரூபா | 2021 ரூபா |
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 164,602 | 148,164 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 60,660,000 | 51,488,000 |
| முற்பணங்களை அறவிடல் | 734,606 | 719,843 |
| வைப்புக்களின் பெறுகை | 31,150 | 13,462 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **61,590,358** | **52,369,469** |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 56,446,793 | 47,599,357 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 797,888 | 641,060 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | - | - |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 824 | 21,843 |
| முற்பணக் கொடுப்பனவு | 1,496,000 | 383,643 |
| வைப்புக் கொடுப்பனவு | 14,350 | 12,662 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **58,755,855** | **48,658,565** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **2,834,503** | **3,710,904** |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலிட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u> | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 2,834,503 | 3,710,904 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | 2,834,503 | 3,710,904 |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(2,834,503)** | **(3,710,904)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | - | - |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| *<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>* | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

3

## 3.5 நிதிஅறிக்கைக்கானகுறிப்புகள்

**அறிக்கையின்அடிப்படை**

01 ஜனவரி2022 முதல்டிசம்பர்31, 2022 வரையிலானகாலப்பகுதிஅறிக்கையிடலாகும்

நிதிஅறிக்கைகளுக்கானகாலம்.நிதிநிலைஅறிக்கைகள்இலங்கைரூபாயில்அருகாமையில்வட்டமிடப்பட்டுள்ளனரூபாய்.

## 3.6 வருவாயைசேகரிப்பதற்கானசெயல்திறன்

தொடர்புடையதுஅல்ல

## 3.7 ஒதுக்கப்பட்டவிதிகளைப்பயன்படுத்துவதன்செயல்திறன்.

| வகை ஏற்பாடு | ஒதுக்கப்பட்டஒதுக்கீடுகள்ரூ. | | உண்மையான செலவு ரூ. | விதிகளைப்பயன்படுத்தியது இறுதியின்சதவீதம்.(%) ஏற்பாடுகள் |
|---|---|---|---|---|
| | அசல் ஏற்பாடுகள் | இறுதி ஏற்பாடுகள் | | |
| மீண்டெழும் | 55,000,000 | 61,000,000 | 57,244,681 | 94 |
| மூலதனம் | 11,000,000 | 11,000,000 | 4,385,706 | 40 |

## 3.8 இந்த திணைக்களம்/மாவட்டசெயலகம்/மாகாணத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் (தொடர்ந்து) நிதி அடிப்படையில் மற்ற அமைச்சகங்கள் மற்றும் துறைகள் ஒரு முகவராக கவுன்சில் ஒழுங்கு முறைகள் 208.

தொடர்புடையதுஅல்ல

## 3.9 நிதிஅல்லாதசொத்துகளைப்புகாரளிக்கும்செயல்திறன்

| சொத்து குறியீடு | குறியீடு விளக்கம் | இருப்பு 31.12.2022ஆக வாரியத்தின்படி கணக்கெடுப்பு அறிக்கைரூ.000 | இருப்பு 31.12.2022படி நிதி நிலைரூ .000 | கணக்கீடு மேற்கொள்ளப்பட விருக்கும் ரூ 000 | அறிக்கையிடல் முன்னேற்றம் சதவிதம்% |
|---|---|---|---|---|---|
| 9152 | இயந்திரம் | 44,193,169 | 44,193,169 | - | - |

## 3.10 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

எனது இல.EDU/C/NEC/FA/2022 திகதி: 2023.05.15

**தலைவர்**

**தேசிய கல்வி ஆணைக்குழு**

**தலைப்பு 335** – தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1)ஆம் பிரிவுக்கு ஏற்ப கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

### 1. <u>நிதிக் கூற்றுக்கள்</u>

### 1.1 முனைப்பலிவுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 335 – தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் கூடிய 2022 டிசம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்படக் கூடிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) பிரிவின் எற்பாடுகளுக்கு ஏற்ப எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவுக்கு ஏற்ப ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற இந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களை குறிப்பிடுதல் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன. 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவுக்கு ஏற்ப கணக்கீட்டு அலுவலருக்கு வருடாந்த விபரங்கள் உள்ளடங்கிய முகாமை கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் வெளியிடப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் பிரிவுடன் சேரத்து வாசிக்கப்படக் கூடிய 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10ஆம் பிரிவுக்கு ஏற்ப சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளரின் அறிக்கை உரிய காலத்தில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் 1.6ஆம் பந்தியில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்ககளின் செல்வாக்கு தவிர, நிதிக் கூற்றுக்களின் 2022 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்துக்காக அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக எற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தரநியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் சாதாரண நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 <u>முனைப்பலிவுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை</u>

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயத்தை முனைப்பலிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு (இ.க.த.) ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டிருக்கின்றேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியவையாகவும் மற்றும் உசிதமானதாகவும் இருக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்காளர் மற்றும் கணக்கீட்டு அதிகாரியின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு அடிப்படைகளுக்கு ஏற்பவும் மற்றும் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையான மற்றும் சாதாரண நிலைமையை வெளிப்படுத்துகின்றவாறு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறு காரணமாக ஏற்படக் கூடிய போதிய பிறழ்கூற்றுக்கள் இல்லாத நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவைப்படுகின்ற உள்ளக கட்டுப்பாட்டை தீர்மானித்தல் கணக்காளரின் பொறுப்பாகும்.

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1)ஆம் பிரிவுக்கு ஏற்ப ஆணைக்குழுவால் வருடாந்தம் மற்றும் காலத்துக்கு காலம் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலுமான முறையிலும் அதன் வருமானம், செலவீனம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பராமரிக்கப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பரிவுக்கு ஏற்ப ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்றிறனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரித்து பராமரிக்கப்படுவதாக கணக்காளர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதோடு அத்தகைய முறைமை செயற்றிறன் தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றை தயாரித்து அதற்கேற்ப முறைமையை வினைத்திறனாகப் பராமரிப்பதற்கு தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

முழுமையாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் பிழை காரணமாக ஏற்படுகின்ற போதிய பிறழ்கூற்று வெளிப்படுத்தல்கள் அற்றவை என சாதாரண உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது குறிக்கோளாகும். சாதாரண உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாகும் ஆயினும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வை மேற்கொள்கின்ற போது, அதனை சகல சந்தர்ப்பங்களிலும் போதியளவு பிறழ்கூற்று வெளிப்படுத்தப்படுகின்றது என உறுதிப்பத்தல் இருக்கமாட்டாது. மோசடி மற்றும் பிழை தனியாக அல்லது கூட்டான செல்வாக்கு காரணமாக போதிய பிறழ்கூற்றுக்கள் வெளிப்படுத்தப்படலாம் என்பதோடு, அதில் போதிய தன்மை தொடர்பில் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலனையாளர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பிலான விளைவு அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு ஏற்ப, கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் தீர்மானம் மற்றும் துறைசார் அக்கறையுடன் செயலாற்றப்பட்டுள்ளது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்துக்கு அடிப்படையொன்றை வழங்குகின்ற போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய போதிய பிறழ்கூற்றுக்கள் ஏற்படுகின்ற இடர்களை அறிந்து கொள்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக காலோசிதமான பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. பிழையாக குறிப்பிடுகின்றதன் காரணமாக ஏற்படுகின்ற போதிய பிறழ்கூற்றுக்களால் ஏற்படுகின்ற விளைவிட மோசடியால் ஏற்படுகின்ற விளைவு அதிகாமாக இருப்பது, அது கூட்டுச்சதி, போலியான ஆவணங்கள் தயாரித்தல், வேண்டுமென்றே கைவிடுதலால், பிழையாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை விட்டுவிடுதல் காரணமாகவாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் தொடர்பில் அபிப்பிராயம் ஒன்றை வெளிப்படுத்துகின்ற எண்ணத்தில் அல்லாமல் இருந்தாலும் காலோசிதமான உரிய கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் தெளிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு காரணமாக இருந்த கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் உரிய முறையில் மற்றும் சாதாரணமாக உள்ளடங்கியுள்ளதாகவும் மற்றும் வெளிப்படுத்துதல் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் முழுமையான முன்வைத்தல் போற்றப்பட்டது.

எனது கணக்காய்வுக்குள் அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்காளருக்கு அறியப்படுத்துகின்றேன்.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவுக்கு ஏற்ப கீழ்க் குறிப்பிடப்படுகின்ற விடயங்களை நான் குறிப்பிடுகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய வருடத்துடன் தொடர்புடைய நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தல்**

**1.6.1 நிதி நிலைமை தொடர்பிலான கூற்று**

**நிதியல்லாத சொத்துக்கள்**

நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி ரூ. 44,193,169/- தொகையாக குறிப்பிடப்பட்டிருந்தது என்பதோடு, திறைசேரியின் சிகாஸ் (CIGAS) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அத்தகைய பெறுமதி 46,619,220 தொகையாக குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக ரூ. 2,426,051 தொகை வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பராமரிக்கப்படாமை**

ஆணைக்கழுவினால் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற ஆவணங்கள் பராமரிக்கப்பட வில்லை

| | ஆவணங்களின் வகை | உரிய ஒழுங்குவிதிகள் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | பிணைப்பொறுப்பு புத்தகம் | நிதி பி. 891(i) | பராமரிக்கப்படவில்லை |
| (ii) | அடிச்சீட்டுப் புத்தகங்களின் ஆவணங்கள் | நிதி பி. 341 | இற்றைப்படுத்தப்படவில்லை |

**2 நிதி மீளாய்வு**

**2.1 பொறுப்புக்கள் மற்றும் அர்ப்பணிப்புக்களின் நிகழ்வகள்**

நி.பி.94(1) இற்கு ஏற்ப வேறு முறையில் ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் தவிர, வருடாந்த மதிப்பீடுகளில் அவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் இருந்தால் தவிர, எந்த திணைக்களமும் ஒரு வேலையை அல்லது சேவையை அல்லது விநியோகம் ஒன்றுக்காக எவ்வித செலவீனத்தை அல்லது பிணிப்புக்கு அல்லது பிணிப்பற்றதாக இருக்க வேண்டும் என்பதோடு அதற்காக மேற்கொள்கின்ற பொறுப்பு மற்றும் செலவுத் தொகையை எச்சந்தர்ப்பத்திலும் நிதி வருடத்திற்காக ஒதுக்கீட்டு தொகையை விஞ்சக்கூடாது. எனவே செலவின விடயம் 2 இற்கு உரிய ரூ.222,189 தொகை ஒதுக்கீட்டை விட அதிகமான பொறுப்புக்களுக்கு பிணிப்புடையதாக இருந்தது அவதானிக்கப்பட்டது.

**2.2 பிரதான கணக்காளரால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

(அ) 2018ஆம் ஆண்டின் 19அம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப பிரதான கணக்காளரால் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதி கட்டுப்பாட்டுக்காக வினைத்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றைத் தயாரித்து பராமரிக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு அலுவளர் சான்றுப்படுத்த வேண்டும் என்பதோடு அத்தகைய முறைமையின் விணைத்திறன் தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கேற்ப முறைமை விணைத்திறனாக செயற்படுத்தவதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு அத்தகைய மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும், அத்தகைய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதற்கான அறிக்கை கணக்காய்வுக்கு முற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளக கணக்காய்வு அறிக்கையை உரிய முறையில் செயற்படுத்துவதற்காக விணைத்திறனான முறைகள் இருப்பதாக பிரதான கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் சான்றுப்படுத்த வேண்டியிருந்தும், அறிக்கையின் 5.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கு ஏற்ப அத்தகைய தேவைப்பாட்டு நிறைவேவற்றப்பட்டிருக்கவில்லை.

**3 நடவடிக்கை மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**3.1.1 செயற்பாடுகளை நிறைவேற்றத் தவறியமை**

தேசிய கல்வி ஆணைக்குழுவின் செயலாற்றுகைத் திட்டம் மற்றும் வருட இறுதியில் செயலாற்றுகையை பரீட்சிக்கின்ற போது கீழ்க் குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

(அ) ஆணைக்குழுச் சட்டத்தை திருத்தம் செய்து நாடாளுமன்ற அங்கீகாரத்திற்கு மீளாய்வு வருடத்தில் ஏப்ரல் மாதம் அளவில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சட்டத்தின் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள், சட்டவரைஞர் திணைக்களத்திற்கு மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என்பதோடு, 21ஆம் நூற்றாண்டிற்கு பொருத்தமான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டத்திற்குள் 30 வருடங்கள் பழமைவாய்ந்த சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அதிக தேவைப்பாடு இருப்பதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கையில் விஞ்ஞானம், தொழிநுட்பம், பொறியியல் அறிவு, கலை, கணிதம் (STEAM) போன்ற அறிவியல் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை ஆவணம் ஒன்றைத் தயாரிப்பதற்கு மீளாய்வு வருடத்தில் ஜுன் மாதம் 30ஆம் திகதி அளவில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2022 டிசம்பர் மாதத்தில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் மூலம் நடாத்தப்பட்ட கல்வி தொடர்பான முதலாவது இருதரப்பு தேசிய ஆய்வுக் கருத்தரங்கிற்கு ஆய்வுப் பத்திரம் ஒன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை ஆசிரியர் தொழில்மயமாக்கலுக்காக ஆசிரியர் கல்வி தொர்பாக பரிந்துரைக்கப்பட்ட தேசிய தந்திரோபாய வழிகாட்டல் கட்டமைப்பு ஒன்றை தயாரிப்பதற்கு 2022 ஆகஸ்ட் மாதம் அளவில் திட்டமிடப்பட்டு இருந்த போதிலும், வருடம் முடிவடைகின்ற சந்தர்ப்பத்திலும் அந்த விடயத்திற்காக தரவுகள் சேகரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

(ஈ) பிரதானமாக 17 முக்கிய துறைகள் உள்ளடங்கிய பல் முறை துறைகள் தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு உரியதாக இருப்பதால், அனைத்து பகுதிகளையும்

உள்ளடக்கிய தேசிய கல்விக் கொள்கை ஒன்று இருக்க வேண்டும் என்பதோடு அதுதொடர்பில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் மூலம் 1992, 2003, 2016 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் பரிந்துரைகளை வழங்கியது. இருப்பினும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியின் இறுதி வரை தேவையான தேசிய கல்விக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.அது அத்தகைய முன்மொழியப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்கு ஒரு தடையாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(உ) 1991ஆம் ஆண்டில் இந்த ஆணைக்குழு ஆரம்பத்திலிருந்தே எளிய நிறுவன வியூகம் ஒன்று நிலவியதால் துறைசார் விசேட அறிவு விருத்தி ஏற்படவில்லை எனக் குறிப்பிட்டு துறைசார் விசேட அறிவு மற்றும் நிறுவன வரலாற்றுத் தகவல்களை மேலும் விருத்தி செய்கின்ற நோக்கத்தில் நிறுவனத்தை 4 பிரிவுகளாகப் பிரித்து இரண்டு உள்ளகக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், எதிர்கால மீள்கட்டமைத்தல் விடயங்கள் 2022 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவடைந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

கையொப்பம்
டி.ஆர்.எம்.வீரரத்ன
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி சார்பில்

| 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதிநிலைமை கூற்றுக்கள் மீதான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 11(1) இன் அடிப்படையில் கணக்காய்வு தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.<br>செலவினத் தலைப்பு 335 | | |
|---|---|---|
| **இலக்கம்** | **கணக்காய்வு அவதானிப்பு** | **மறுமொழி** |
| 1.6 | நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கருத்துக்களை வெளிப்படுத்தல் | |
| 1.6.1 | நிதி நிலைமை தொடர்பிலான வெளிப்படுத்தல் | |
| | நிதியல்லாத சொத்துக்கள் | இந்த வேறுபாட்டை சரிசெய்வதற்காக திறைசேரிக்கு 2022.10.31ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது, என்பதோடு எதிர்காலத்தில் அதை சரிசெய்வதற்கு திறைசேரியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 1.6.2 | ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பராமரிக்காமை | |
| | (I) பிணை வைப்பீட்டு புத்தகம் | உடன்படுகின்றோம். பிணை வைப்பீட்டுப் புத்தகம் ஒன்றை எதிர்காலத்தில் பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| | (II) அடிச்சீட்டு புத்தக ஆவணங்கள் | உடன்படுகின்றோம். அடிச்சீட்டு புத்தக ஆவணத்தை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 2 | நிதி மீளாய்வு | |
| 2.1 | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல் | திருத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி காரணமாக, செலவுத் தலைப்பு இல. 1404இற்கான செலவினம் குறிப்பிட்ட ஆண்டில் அதிகரித்துள்ளது. எனவே, ஆண்டு இறுதியில் செலுத்த வேண்டிய நிலுவை ரூ. 166,935.00 அடுத்த ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டது.<br><br>செலவினத் தலைப்பு இல.1301 இற்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு முழுமையாக பயன்படுத்தப்பட்டுவிட்டது என்பதோடு NA 8919 கொண்ட வேன் வாகனத்தின் காப்புறுதியை புதுப்பிப்பதற்கான கட்டணத்தை அடுத்த ஆண்டில் செலுத்துவதற்கு தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது. |
| 2.2 | தலைமை கணக்காய்வு அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டிய விடயம் | |
| | (அ) | தேசியக் கல்வி ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறை ஒன்றைத் தயாரித்து பராமரிக்கின்ற நோக்கத்திற்காக உள்ளக கணக்காய்வு முறைமை ஒன்று இஸ்தாபிக்கப்பட்டு, 2021 ஆம் ஆண்டில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது, ஆனால் 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை மற்றும் ஊழியர்கள் விட்டு விட்டு கடமைக்கு வருகை தருதல் போன்ற தடைகள் காரணமாக அதை முறையாக பராமரிக்க முடியாமல் போனது. தற்போது அத்தகைய முறைமையை முனைப்புடன் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய மீளாய்வு அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| | (ஆ) | 2022ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை மற்றும் உழியர்கள் விட்டு விட்டு கடமைக்கு வருகை தருதல் போன்ற தடைகள் ஏற்பட்டதன் காரணமாக கணக்காய்வு முகாமைக் குழுவின் ஒரு அமர்வை மாத்திரமே நடத்த முடிந்தது. |
| 3 | நடவடிக்கை மீளாய்வு | |
| 3.1 | செயலாற்றுகை | |
| 3.1.1 | கடமைகளை நிறைவேற்றாமை | |
| | (அ) | தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தம் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சட்டம் தொடர்பில் முழுமையாக ஆய்வு செய்த பின்னர், ஒரு விசேட நிபுணர் குழுவொன்றினால் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களை கல்வி அமைச்சுக்கு அனுப்பிய பின்னர் அதனை நாடாளுமன்றத்திற்கு |

| | | |
|---|---|---|
| | | சமர்ப்பிப்பதற்கு முன்னர் பரிந்துரைகளின் சரியான தன்மை குறித்து விசாரணை செய்வதற்கு சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்பின்னர், திருத்தப்பட்ட சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன்படி, சட்டவரைஞர் திணைக்களத்தின் உரிய மறுமொழி கிடைக்கப் பெற்றவுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| | (ஆ) | 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, நாட்டில் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட பல பிரச்சினைகளின் காரணமாக, திட்டமிட்டபடி ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போனது. தபால் அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டதால் ஆய்வு வினாக்கொத்துக்களை விநியோகம் செய்தல் மற்றும் தரவு சேகரிப்பில் தாமதம் ஏற்பட்டது. மேலும், போக்குவரத்தில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக குழு நேர்காணல்களை திட்டமிட்டபடி நடத்த முடியாமல் போனது. |
| | (இ) | 2022ஆம் ஆண்டில் எற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பாடசாலைகளில் ஏற்பட்ட பரபரப்பான சூழல், தபால் வேலைநிறுத்தம் போன்ற பிரச்னைகளால், திட்டமிட்டபடி ஆய்வு தரவு சேகரிப்பு பணியை மேற்கொள்ள முடியாமல் போனது. வினாக்கொத்துக்களின் தரவுகளை அவ்வப்போது தொலைபேசியில் விசாரித்து சேகரிக்க வேண்டியிருந்தது. எனவே, இலங்கையில் ஆசிரியர்களின் தொழில்சார் மயமாக்கலுக்கான பரிந்துரைக்கப்பட்ட தேசிய மூலோபாய கட்டமைப்பை 2022 ஆம் ஆண்டில் ஆசிரியர் கல்விக்காக தயாரிக்க முடியாமல் போனது. |
| | (ஈ) | இலங்கையின் பல்வேறு கல்வித் துறைகளில் முக்கியமான எட்டு துறைகளை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பு (2020-2030) அறிக்கை கல்வி அமைச்சின் ஊடாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| | (உ) | புதிய ஆணைக்குழு 2020 மார்ச் மாதத்தில் அதன் பணிகளை ஆரம்பித்ததுடன், ஆணைக்குழுவை கட்டமைத்தல், தேசிய கல்விக் கொள்கையைத் தயாரித்தல் மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தம் செய்தல் ஆகிய பணிகள் தொடங்கப்பட்டன. அதன்படி, நிறுவன கட்டமைப்பை புதிய முகப்புடன் மாற்றியமைத்தல், ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்துதல், அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு நடைமுறையை தயாரித்தல் மற்றும் தேசிய கல்விக் கொள்கை தயாரிக்கும் பணிகள் என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br><br>ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தம் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதில் கூறப்பட்ட மறுசீரமைப்பு செயல்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக, மூன்று உள்ளகக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அவை முகாமைக் குழு, ஆராய்ச்சி ஆலோசனை மற்றும் நெறிமுறைக் குழு மற்றும் வெளியீட்டுக் குழு. என்பனவாகும். தேவையான சந்தர்ப்பங்களில், இந்த குழுக்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். |

# அத்தியாயம் 04 - செயற்சாதனை குறிகாட்டிகள்

## 4.1 – நிறுவனத்தின் செயற்சாதனை குறிகாட்டிகள்

| குறிப்பிட்ட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | | |
|---|---|---|---|---|
| | **100% -90%** | **75% -89%** | **50% -74%** | **50 %குறைவு** |
| | பொருந்தாது | | | |
| | | | | |

# அத்தியாயம் 05 - நிலைபேறானஅபிவிருத்தி இலக்குகளை(SDGs) அடைதல்

## 5.1 நிலைபேறானஅபிவிருத்தி இலக்குகள்

அனைவருக்கும் சமமான தரமான கல்வியை உறுதி செய்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும்கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

## 5.2 நிலைபேறானஅபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும்சவால்கள்

கல்வி கொள்கை வகுக்கும் செயல்பாட்டின் போது பொருந்தும் நிலைபேறானஅபிவிருத்தி இலக்குகளை( SDG )அடைவதை நிச்சயப்படுத்திக்கொள்வதற்காக தேசிய கல்விஆணைக்குழுவினால் தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி,தேசிய கல்விக் கொள்கைசட்டக 2020-2030 அறிக்கையின் தயாரிப்பு ஜூலை 2020 இல் தொடங்கப்பட்டது மற்றும் **நிலைபேறான**அபிவிருத்தி இலக்குகளை( SDG )அடைவதன் அடிப்படையில்கொள்கை பரிந்துரைகளை இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலக்கு: உள்ளடக்கம் மற்றும் நியாயமான தரங்கொண்ட கல்வியை உறுதி செய்ய மற்றும் அனைவருக்கும் வாழ்க்கை நீடித்த கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்தல். .

- 5.2.1 ஆண்டு 2030 இல் அனைத்தும் பெண் பிள்ளைகள் மற்றும்ஆண்பிள்ளைகளுக்கு பொருத்தமான மற்றும் பயனுள்ள கற்றல் பேறுகளை கொண்டு வர நியாயமான மற்றும் பண்புதரம் மிக்க ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்வி முழுமையடைவதை உறுதிப்படுத்தல்
- 5.2.2 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்துப்பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு தரமான முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி,கவனிப்பு மற்றும் ஆரம்பக்கல்விக்கான அணுகலைப் பெறுவதை உறுதி செய்தல் மற்றும் இதன் மூலம் அவர்களை ஆரம்பக்கல்விக்கு தயார்படுத்தல்
- 5.2.3 ஆண்டு 2030 ஆகும் போது,பல்கலைக்கழகம்உட்பட கொள்ளக்கூடியவாறாக மற்றும் தரமிக்க தொழில்நுட்ப,தொழில் மற்றும் மூன்றாம்நிலை கல்விக்கு அனைத்து பெண்களுக்கும் ஆண்களுக்கும்சமமான அணுகலைஉறுதிப்படுத்தல்
- 5.2.4 ஆண்டு 2030 ஆகும் போது வேலைவாய்ப்பு மற்றும் முயற்சியாண்மைக்கு வேண்டியதொழில்நுட்பம் மற்றும் தொழில் திறன்கள் உட்பட பொருத்தமான திறன்கள் கொண்ட இளைஞர் யுவதிகளினதும் மற்றும் வளர்ந்தவர்களினதும் எண்ணிக்கையில் கணிசமானவை வளர்ச்சி பார்க்கக்கூடியதாக இருத்தல்.
- 5.2.5 ஆண்டு 2030 ஆகும் போது,அங்கவீன தனிநபர்கள்,ஆதிவாசிகள் மற்றும் இடர்நேர்வில் உள்ள பிள்ளைகள்உட்படஇடர்நேர்வில் உள்ள பிரிவினருக்கு கல்வியில்பெண் ஆண் சமூகத்தின் முரண்பாடுகளை ஒழிக்க மற்றும் அனைத்து நிலைகல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கு சமமான அணுகலை உறுதிப்படுத்தல்.
- 5.2.6 ஆண்டு 2030 ஆகும் போது,ஆண்கள் மற்றும் பெண்கள் இருதரப்பிலும் அனைத்து இளைஞர் யுவதிகள் மற்றும் வளர்ந்தவர்களிடம் கணிசமான அளவுஎழுத்தறிவு மற்றும் கணித திறன் பெற்றுக்கொண்டிருப்பதை உறுதிப்படுத்தல்
- 5.2.7 ஆண்டுகள் 2030 ஆகும் போது,நிலைபேறான அபிவிருத்திக்கான கல்வி மற்றும் நிலைபேறான வாழ்க்கை முறை,மனித உரிமைகோரல்கள்,பெண் ஆண் சமத்துவம்,சமாதான மற்றும் வன்முறையற்ற கலாச்சாரத்தை ஊக்கவித்தல், உலகளாவிய குடியுரிமை மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையை மதிக்கும் மற்றும்நிலைபேறான அபிவிருத்திக்கு கலாச்சார பங்களிப்புகளில் நிலைபேறான அபிவிருத்திக்கு வேண்டிய அறிவு மற்றும் திறன்களை அனைத்து கற்போர்களும் பெற்றுக்கொள்வதை உறுதி செய்தல்.

# அத்தியாயம் 6 - மனித வளபக்கத் தோற்றம்

## 6.1 பணியாளர் எண்ணிக்கை முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | கிடைக்கக்கூடியபணியாளர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள்/(மேலதிகமானவை) |
|---|---|---|---|
| சிரேட்ட நிலை | 12 | 10 | 02 |
| மூன்றாம் நிலை | 10 | 05 | 05 |
| இரண்டாம் நிலை | 10 | 07 | 03 |
| ஆரம்ப நிலை | 10 | 08 | 02 |

## 6.2 நிறுவனத்தின்செயல்திறனில்அதிகமானஊழியர்களின்பற்றாக்குறை.

பொருத்தமற்றது

## 6.3 மனிதவள அபிவிருத்தி

ஆண்டின் இறுதி பயிற்சித் திட்டம் பின்வருமாறு

| தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் | இலக்குக் குழு, | பயிற்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம் | நேர வரையறை | எதிர்பார்க்கப்படுகின்ற திறன் மட்டத்தை அடைவதற்கான பொறிமுறை |
|---|---|---|---|---|
| தமிழ் மொழி பயிற்சி கற்கை | ஊழியர்கள் | மொழி தேர்ச்சி பெறுதல் | 200/150/100 மணித்தியாலங்கள் | தேர்ச்சி பெறுதல் |
| சிங்கள மொழிப் பயிற்சி கற்கை | ஊழியர்கள் | மொழி தேர்ச்சி பெறுதல் | 200 மணித்தியாலங்கள் | தேர்ச்சி பெறுதல் |
| வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை | ஊழியர்கள் | தரத்திற்கு உரிய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் | தரத்திற்கு நியமிக்கப்பட்ட03/05 வருடங்களுக்குள் | தேர்ச்சி பெறுதல் |
| ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்பு | ஊழியர்கள் | ஊழியர்களின் திறனை மற்றும் விடயங்களை எளிதாக்குதல் | வருடம் 2/1 | தேர்ச்சி பெறுதல் |
| Hybrid / Auto வாகன சேவை பராமரிப்பு தொடர்பிலான கற்கைநெறி | சாரதிகள் | அறிவை இற்றைப்படுத்திக் கொள்தல் | நாட்கள் 3/2 | பங்குபற்றுதல் |
| கணனிப் பாடநெறி | | அறிவை இற்றைப்படுத்திக் கொள்தல்.·. உள்வாரியான பதவி உயர்வுக்காக | குறைந்தபட்சம் 01 வருட சான்றிதழ் ஒன்று இருத்தல் மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது | தேர்ச்சி பெறுதல் |
| பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி | நிகழ்ச்சித்திட்ட அலுவலர்கள் | உள்வாரியான பதவி உயர்வுக்காக | வருடம் 1 | தேர்ச்சி பெறுதல் |
| கல்வி தொடர்பான முதுகலைமானி பட்டம் | கொள்கை ஆராய்ச்சி அலுவலர்கள் | உள்வாரியான பதவி உயர்வுக்காக | வருடம் 1 | தேர்ச்சி பெறுதல் |

## Chapter 07- Compliance Report

| தொடரில. | விண்ணப்பிக்க வேண்டிய தேவை | இணக்க நிலை (இணக்கமான / இணக்கமற்ற) | இல்லை என்றால் சுருக்கமான விளக்கம் தரவும் | எண்ணிக்கை இணக்கமில்லாமையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு முன்மொழியும் துல்லிய தீர்மான அமுலாக்கம் |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி நிலை அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்ககளின் முற்பண கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வர்த்தக மற்றும் தயாரிப்பு முற்பண கணக்கு (வணிக முற்பண கணக்குகள்) | | பொருந்தாது | பொருந்தாது |
| 1.4 | களஞ்சிய முற்பண கணக்கு | | பொருந்தாது | பொருந்தாது |
| 1.5 | சிறப்பு முற்பண கணக்கு | | பொருந்தாது | பொருந்தாது |
| 1.6 | மற்றவை | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை |
| 2 | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்தல் (ரூ.** 4 45) | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துக்களின் பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | தனிப்பட்ட ஊதிய ஆவணங்கள் / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை இற்றைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினவல் பட்டியலை இற்றைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளககணக்காய்வு பதிவை இற்றைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குச் சுருக்கங்களையும் (CIGAS) தயாரித்து, உரிய திகதியில் திறைசேரியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டைப் இற்றைப்படுத்தி பேணுதல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவு ஆவண பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணுதல் | இணக்கமானது | | |
| 2.8 | தொகை பதிவேட்டு ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணுதல் | இணக்கமானது | | |
| 2.9 | சேதப் பதிவேட்டைப் இற்றைப்படுத்தி பேணுதல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பட்டியலை இற்றைப்படுத்தி பேணுதல் | இணக்கமானது | | |
| 2.11 | துணை துண்டுப்பிரசுரப் புத்தகப் பதிவேட்டைப் இற்றைப்படுத்தி பேணுதல்(GA-N20) | இணக்கமானது | | |
| 3 | **நிதிக்கட்டுப்பாட்டிற்கான செயல்பாடுகளின் பிரதிநிதித்துவம் (நி. ஒ** 135 ) | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் அதிகாரங்களை வழங்குதல் | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகார நிறுவனத்திற்குள் அதிகாரங்களை மாற்றுவது பற்றி நிறுவனத்திற்கு தெரிவித்திருத்தல் | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு பரிவர்த்தனையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 3.4 | 11.05.2014 திகதியிட்ட அரசு கணக்கு சுற்றறிக்கை எண். 171/2004 இன் படி | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரசு ஊதியம் வழங்கும் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துவதில் கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுதல் | | | |
| 4 | **வருடாந்த திட்டங்களை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த அமுலாக்க நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த பெறுகை திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்ட தயாரித்தல் | | உள்ளக கணக்காய்வு பிரிவு இல்லாமை | இதற்கு தேவையான உதவிகளை மற்ற திணைக்களங்களிலிருந்து இருந்து பெற ஏற்பாடு செய்யப்படும் |
| 4.4 | வருடாந்த உத்தேச கணக்கை தயாரித்து உரிய திகதியில் தேசிய வரவுசெலவு திணைக்களத்துக்கு (NBD) சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த பணப் புழக்க அறிக்கையை திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 5 | **கணக்காய்வை விசாரணைகள்** | | | |
| 5.1 | கணக்காளர் நாயகம் நிர்ணயித்த திகதிக்குள் அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் பதிலளித்திருத்தல் | இணக்கமானது | | |
| 6 | **உள்ளககணக்காய்வு** | | | |
| 6.1 | நி.ஒ134 (2) DMA / 1-2019இன் படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பிறகு உள்ளக் கணக்காய்வு திட்டத்தைத் தயாரித்தல் | | உள்ளக கணக்காய்வு பிரிவு இல்லாமை. | இதற்கு தேவையான உதவிகளை மற்ற திணைக்களங்களிலிருந் து இருந்து பெற ஏற்பாடு செய்யப்படும் |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல் | இணக்கமானது | | |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளையும் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல் | | பொருந்தாது. | |
| 6.4 | நிதி ஒழுங்குமுறை 134 (3) இன் படி அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளையும் கணக்காய்வு நாயகத்திடம் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 7 | **கணக்காய்வுமற்றும் முகாமைத்து குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இன் படி தொடர்புடைய ஆண்டில் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடத்தியிருத்தல் | | | |
| 8 | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை எண். 01/2017 இன் அத்தியாயம் 07 இன் படி, சொத்து வாங்குதல் மற்றும் முறைகேடுகள் பற்றிய தகவல்களை, கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்படி சுற்றறிக்கையின் அத்தியாயம் 13 இல் அந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க பொருத்தமான தொடர்பு அதிகாரியை நியமித்து, அந்த அதிகாரி | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பற்றிய தகவலைக் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்குத் தெரிவித்தல் | | | |
| 8.3 | பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 க்கு இணங்க பொருட் கணக்கெடுப்புகளை நடத்தி உரிய அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்திருத்தல் | இணக்கமானது . | | |
| 8.4 | வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிக, குறைவாக மற்றும் பிற பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் செய்திருத்தல் | இணக்கமானது | . | |
| 8.5 | பழுதடைந்த பொருட்களை அகற்றுதல் 772 க்கு இணங்க செயல்படுத்தல் | இணக்கமானது | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | இருப்பிலுள்ள வாகனங்களுக்கான தினசரி சாரதி பதிவுகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து, உரிய திகதியில் கணக்காளர் நாயகத்திடம் சமர்ப்பித்திருத்தல் | இணக்கமானது | | |
| 9.2 | பழுதடைந்து 06 மாதங்களுக்குள் அகற்றப்படல் செய்யப்பட்டிருக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 9.3 | வாகன சம்பவ பதிவு புத்தகங்களை வைத்திருந்து அவற்றை இற்றைப்படுத்தி பேணுதல் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாகவும நி.ஒ. 103, 104, 109 மற்றும் 110 க்கு இணங்க செயற்படுதல் | இணக்கமானது | | |
| 9.5 | 29.12.2016 திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளுக்கு இணங்க வாகனங்களின் எரிபொருள் எரிப்பு மறு ஆய்வு செய்தல் | | எரிபொருள் பற்றாக்குறையால் ஆய்வு செய்ய முடியவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல், திட்டமிட்டபடி எரிபொருள் எரிப்பு சரிபார்க்கப்படும். |
| 9.6 | குத்தகைக் காலத்திற்குப் பிறகு,வரி வாகன பதிவு புத்தகங்களின் முழு உரிமையும் கையகப்படுத்தப்படுத்தல் | இணக்கமானது | | |
| 10 | **வங்கி கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | வங்கி கணக்கிணக்கக் கூற்று அறிக்கைகளை உரிய திகதியில் தயாரித்து உறுதிப்படுத்தி கணக்காய்வுக்கு சமர்ப்பித்திருத்தல் | இணக்கமானது . | | |
| 10.2 | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அல்லது அதற்கு முந்தைய ஆண்டில் முன் கொணரப்பட்ட மற்றும் செயலற்ற வங்கிக் கணக்குகளைத் தீர்த்திருக்க வேண்டும் | இணக்கமானது . | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க கூற்று அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட நிலுவைகள் தொடர்பான நிதியியல் விதிமுறைகளுக்கு இணங்கச் செயல்பட்டு, அந்த நிலுவைகளை ஒரு மாத காலத்திற்குள் செலுத்தியிருக்க வேண்டும். | இணக்கமானது . | | |
| 11 | **ஒதுக்கீடுகளின் பயன்பாடு** | | | |
| 11.1 | வழங்கப்பட்ட ஒதுக்கீடு அவற்றின் வரம்புகளை மீறாத வகையில் செலவு | இணக்கமானது . | | |
| 11.2 | நி .ஒ.94 (1) இன் படி, வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் பயன்பாட்டிற்குப் பிறகு, ஒதுக்கீட்டு வரம்பை மீறாமல், ஆண்டின் இறுதியில் பொறுப்புகளைப் பெறுதல் | இணக்கமானது . | | |
| 12 | **அரச அதிகாரிகளின் முற்பண கணக்குகள்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12.1 | எல்லைப்பாட்டுக்கு இணங்குதல் | இணக்கமானது. | | |
| 12.2 | நிலுவையில் உள்ள கடன் மீதிகாலத்தை பகுப்பாய்வு செய்தல் | இணக்கமானது | | |
| 12.3 | ஓராண்டுக்கு மேல் பெற்ற கடன் பாக்கியை செலுத்தியிருக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 13 | **பொது வைப்பு கணக்கு** | | | |
| 13.1 | காலாவதியான வைப்புகளைப் பற்றி571ன் படி செயல்பட்டிருக்க வேண்டும் | இணக்கமானது. | | |
| 13.2 | பொது வைப்புத் தொகைக்கான கட்டுப்பாட்டுக் கணக்கைப் இற்றைப்படுத்தி பேணுதல் | இணக்கமானது. | | |
| 14 | **முற்பணகணக்கு** | | | |
| 14.1 | பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்துக்கு பணப்புத்தகத்தின் மீதியை அனுப்பியிருக்க வேண்டும். | இணக்கமானது. | | |
| 14.2 | நி.ஒ. பிரிவு 371 இன் கீழ் வழங்கப்பட்ட உடனடி இடைக்கால ஒப்பந்தம், அந்த செயல்பாடு முடிந்த ஒரு மாதத்திற்குள் தீர்வு காணப்பட்டது. | இணக்கமானது. | | |
| 14.3 | பொ.ச. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறாத உண்மையான இடைக்கால ஒப்பந்தத்தை வழங்குதல் | இணக்கமானது. | | |
| 14.4 | திறைசேரி புத்தகங்களுடன் அதிகபட்ச கணக்கு இருப்பு மாதாந்த ஒப்பீடு | இணக்கமானது. | | |
| 15 | **வருவாய் கணக்கு** | | | |
| 15.1 | சேகரிக்கப்பட்ட வருமானத்தில் இருந்து உரிய விதி முறைகளின் படி திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | | ஏற்றதாக இல்லை. | |
| 15.2 | சேகரிக்கப்படும் வருவாய் வைப்பு கணக்கில் வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்பட வேண்டும் | இணக்கமானது. | | |
| 15.3 | பொ.ச. 176 பற்றாக்குறை வருவாய் அறிக்கைகளை கணக்காளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது. | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எல்லைக்குள் பணியாளர்களை கொண்டிருத்தல் | இணக்கமானது. | | |
| 16.2 | அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்துப் பூர்வமாக கடமைப் பட்டியலை வழங்கியிருக்க வேண்டும் | இணக்கமானது. | | |
| 16.3 | 20.09.2017 திகதியிட்ட எம்.எஸ்.டி 04/2017 சுற்றறிக்கையின் படி அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருக்க வேண்டும். | இணக்கமானது. | | |
| 17 | **பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் சட்டம் மற்றும் விதிமுறைகளின் படி தகவல் அதிகாரியை நியமித்தல் மற்றும் தகவல் ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணல் | இணக்கமானது. | | |
| 17.2 | நிறுவனத்தைப் பற்றிய தகவல்கள் அதன் இணையதளத்தின் மூலம் வழங்கப்படுகின்றன, மேலும் இணையதள வழியாகவோ அல்லது மாற்று வழிகள் மூலமாகவோ நிறுவனம் குறித்த பாராட்டுகள்/குற்றச்சாட்டுகளை வெளியிட | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொதுமக்களுக்கு உதவுதல் | | | |
| 17.3 | தகவல் சட்டத்தின் பிரிவு 08 மற்றும் 10 ன் படி வருடத்திற்கு இரண்டு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | இணக்கமானது . | | |
| 18 | **குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி குடிமக்கள் /சேவை பெறுநர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் | | தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றன | தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 18.2 | மேற்படி சுற்றறிக்கையின் பத்தி2.3இன் படி,குடிமக்கள்/சேவை பெறுநரின் சாசனத்தின் வரைவு மற்றும் செயல்படுத்தலை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனங்கள் ஒரு வழிமுறையை உருவாக்குதல் | | தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றன | தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 19 | **மனித வளத் திட்டமிடலைவகுத்தல்** | | | |
| 19.1 | 24.01.2018 திகதியிட்ட பொதுநிர்வாக சுற்றறிக்கை எண். 02/2018 இணைப்பு 02 அடிப்படையில் மனிதவளத் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | | |
| 19.2 | மேற்கண்ட மனிதவளத் திட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் வருடத்திற்கு குறைந்தது 12 மணிநேர பயிற்சியை உறுதி செய்திருக்க வேண்டும் | | | பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2022 இன் படி, திட்டமிட்டபடி பயிற்சி வாய்ப்புகளை வழங்க போதுமான ஏற்பாடு இல்லை. |
| 19.3 | மேற்கூறிய சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின் அடிப்படையில் முழு ஊழியர்களுக்கும் வருடாந்திர செயல்திறன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருக்க வேண்டும். | | தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றன | தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பத்தியின் படி மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றின் பொறுப்பில் மூத்த அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| 20 | **கணக்காய்வு வினவுதல்களுக்கு பதிலளித்தல்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டுகளில் கணக்காளர் நாயகம் வெளியிடப்பட்ட கணக்காய்வு வினவுதலில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டன. | இணக்கமானது | | |

ஒய்.ஆர். ஹெவசிலியானா
செயல்திட்டஅலுவலர் (நிதி)
தேசியகல்விஆணைக்குழு